TNJR

# காலாண்டு பொதுத்தேர்வு - 2019

## ஒன்பதாம் வகுப்பு

## தமிழ் முதல் தாள்

(செய்யுளும், உரைநடையும்)

பதிவு எண் : |  |  |  |  |  |  |

நேரம்: 2.30 மணி

மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள் 14)

பலவுள் தெரிக: 14 x 1 = 14

1. தமிழ்விடு தூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என்றவர்
   அ) மாக்ஸ்முல்லர் ஆ) கால்டுவெல் இ) ச.அகத்தியலிங்கம் ஈ) எல்லிஸ்
3. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
4. மல்லல் - பொருள் யாது?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
5. சொற்றொடர்களை முறைப்படுத்துக. அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் பிடித்தல் என்கிறது.
   அ) ஆ - அ - இ ஆ) ஆ - இ - அ இ) இ - ஆ - அ ஈ) இ - அ - ஆ
6. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு
   அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்காமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்
7. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசிய திறனறி கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
8. விடை வரிசையைத் தேர்ந்தெடு.
   அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.
   ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி
   அ) நேவிக், சித்தாரா ஆ) நேவிக், வானூர்தி இ) வானூர்தி, சித்தாரா ஈ) சித்தாரா, நேவிக்
9. கண்ணியில் வரும் அடிகள்
   அ) இரண்டடி ஆ) மூவடி இ) நான்கடி ஈ) ஐந்தடி
10. திமிலுடன் காளை ஓவியம் உள்ள இடம்
    அ) கல்லூத்து ஆ) பெனி-ஹாசன் இ) சித்திரக்கல்புடவு ஈ) கினோஸஸ்

பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி:

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்

11. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
    அ) நற்றிணை ஆ) புறநானூறு இ) பெரியபுராணம் ஈ) மணிமேகலை
12. கா என்பதன் பொருள் யாது?
    அ) மலர் ஆ) சோலை இ) தேன் ஈ) அரும்பு
13. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.
14. கருங்குவளை - இலக்கணக்குறிப்பு வரைக.

Scanned by CamScanner

## பகுதி - II (மதிப்பெண்கள் 20)

### பிரிவு - 1

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளி:** 5 x 2 = 10

15. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
16. கூவல் என்று அழைக்கப்படுவது எது?
17. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
18. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
19. நான்கு மொழிக் குடும்பங்கள் யாவை?
20. இணைய வணிகம் என்றால் என்ன?
21. அறிவை விரிவு செய் பகுதியிலுள்ள ஏதேனும் ஒரு நூல்-ஆசிரியர் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளி:** 5 x 2 = 10

22. தமிழோவியம் பகுதியில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
23. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
24. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
25. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டி கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.
26. மணிமேகலையில் குறிப்பிடப்படும் அமைச்சர் குழுக்கள் யாவை?
27. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
28. விடல் என்று முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

## பகுதி - III (மதிப்பெண்கள் 50)

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி:** 3 x 5 = 15

29. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?
30. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்வாறு பிணைந்திருந்தது?
31. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பினைக் கூறுக.
32. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்பட்டது?
33. ஆளறி சோதனைக் கருவி குறித்து விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி:** 3 x 5 = 15

34. தமிழ்விடுதூது குறிப்பிடும் வனப்புகளை எழுதுக.
35. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
36. உங்கள் ஊரில் நடைபெறும் விழ முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.
37. என் சமகாலத் தோழர்களே கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
38. புறநானூறு - குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 4 x 5 = 20

39. பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) நான்முகனார் | - | 1. எட்டுத்தொகை |
| ஆ) தண்டமிழாசான் | - | 2. தமிழ் ஒளி |
| இ) புறநானூறு | - | 3. திருவள்ளுவர் |
| ஈ) தொல்காப்பியம் | - | 4. சீத்தலைச்சாத்தனார் |
| உ) பட்டமரம் | - | 5. தொல்காப்பியர் |

Scanned by CamScanner

40. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:

இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை என்று அறியப்படும் சர் ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலப் பொறியாளர், கல்லணையைப் பலவாண்டு ஆராய்ந்தார். கல்லணை பலகாலம் மணல் மேடாகி நீரோட்டம் தடைபட்டது. 1829 காவிரிப் பாசனப் பகுதிக்குத் தனிப்பொறுப்பாளராக ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பட்டார். இவர்தான் பயனற்று இருந்த கல்லணையைச் சிறு சிறு பகுதிகளாய்ப் பிரித்து மணல் போக்கிகளை அமைத்தார். கல்லணைக்கு கிராண்ட் அணைக்கட் என்ற பெயரையும் சூட்டினார்.

1. கல்லணையைக் கட்டியவர் யார்?
2. இந்திய நீர்ப்பாசனத் தந்தை எனப்படுபவர் யார்?
3. கல்லணையைச் சரிசெய்ய சர் ஆர்தன் காட்டன் செய்த செயல் யாது?
4. கல்லணையின் வேறு பெயர் என்ன?
5. மேலுள்ள உரைப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு தருக.

41. படம் உணர்த்தும் கருத்தை நயமாக ஐந்து தொடர்களில் எழுதுக:



42. 'நீர் இன்றி அமையா' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் 16)

விரிவாக விடையளி: 2 x 8 = 16

43. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுததுக்காட்டுகளுடன்விளக்குக.

*(அல்லது)*

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) தொல்காப்பியர் கூறும் உயிர்வகை பற்றிய கருத்துக்களை விரித்து எழுதுக.

******

Common Exam

Scanned by CamScanner

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2019
## ஒன்பதாம் வகுப்பு
## தமிழ் முதல் தாள்
## தஞ்சாவூர் மாவட்டம்

விடைக்குறிப்பு

1) இ. சிற்றிலக்கியம்
2) இ. அகத்தியலிங்கம்
3) ஈ. புணரி
4) இ. வளம்
5) அ. ஆ. அ. இ
6) ஆ. திருவாரூர் - கரிக்கையூர்
7) ஈ. மூன்றும் சரி
8) ஈ. சித்ரா, தேவிக்
9) அ. இரண்டடி
10) அ. கல்லூத்து
11) இ. பெரியபுராணம்
12) ஆ. சோலை
13) கா<u>டெ</u>ல்லாம், மா<u>டெ</u>ல்லாம் டெ - எதுகை
14) பண்புத்தொகை.

---

15) நாங்கள் பேசும் மொழி (தமிழ்) தென் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.
16) உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை கூவல்.
17) மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சு விரட்டு, எருதுகட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு.
18) தானியக்கப் பண இயந்திரம், திறனட்டை கருவி, ஆளறி சோதனைக் கருவி, அட்டை பயன்படுத்தும் இயந்திரம், இணைய வழிப் பதிவு
19) இந்தோ-ஆசிய மொழிகள், திராவிட மொழிகள்
ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன திபெத்திய மொழிகள்

Scanned by CamScanner

20) இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கேல் ஆல்ட்ரிச் 1979 இல் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார். இது இணைய உலகின் மற்றொரு பாய்ச்சலாகக் கருதப்படுகிறது.

21) பாரதிதாசன் - இவர் பாவேந்தர், புரட்சிக் கவி என்றெல்லாம் அழைக்கப் படுகிறார் - இயற்பெயர் கனகசுப்புரத்தினம் - அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு முதலான நூல்களைப் படைத்தவர்.

---

22) காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!

23) அன்னங்கள் விளையாடும் அகன்ற நீர்நிலைகளில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகிலுள்ள பாக்கு மரங்களின் மீது பாயும்.

24) இடம் : மணிமேகலை ; விழாவறை காதை
பொருள் : புகார் நகரில் தெருக்கள், மன்றங்களில் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள் என்று முரசறிவித்தான்.

25) பொறுமை, அடக்கம் என்கிற கட்டுப்பாடுகளைக் கடக்காமல், செயல் படுவோமானால், நிறைவான வாழ்வை எளிதில் பெறலாம் என்கிறார் கவிஞர்.

26) ஐம்பெருங்குழு, எண்பேராயம்.

27) தன்னை இகழ்வாரைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

28) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

---

29) மனித வாழ்வை எளிதாக்கி, நேரத்தையும் உழைப்பையும் வீணாக்காமல் பயன்பெற உதவுகின்றன - நிலத்தடி நீர்வளம், எண்ணெய் வளம் காண உதவுகின்றன - மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டினால், உடனடியாக எச்சரிக்கை செய்ய முடிகிறது - வங்கிச் செயல்பாடுகள், தொலைக்காட்சி முதலான பலவற்றிற்கும் உதவுகின்றன.

30) ஏறுதழுவுதலை முல்லை நிலப் பண்பாட்டின் அடையாளமாகக் காட்டுகிறது. முல்லை, ~~[illegible]~~ மருதம் மக்களின் நாகரிகச் சிறப்பைச் சுட்டிக் காட்டுகிறது. முல்லை நிலப் பெண்டிர், முரட்டுக் காளையை அடக்கிய வீரனையே விரும்பி ஏற்பர். மருதத்தில் மாடுகளை ஏரில் பூட்டி, வேளாண்மைக்குப் பயன்படுத்தினர்.

Scanned by CamScanner

31) தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குடகு, குறு, கோண்டா,
<u>தமிழ்</u>: தொன்மையும் இலக்கிய இலக்கண வளமும் உடைய மொழி - தனித்து இயங்கும் மொழி - பிற மொழிக் கலப்புக் குறைந்த மொழி - பிற திராவிட மொழிகளின் தாய்மொழி. தேன் போன்ற இனிமையுடைய மொழி
தெலுங்கு - இதன் எழுத்துமுறை, தேவநாகரியை ஒட்டி அமைந்தது.

32) கல்லணையில் பாய்ந்தோடும் நீரின் அளவை அதிகரிக்கவும், அணையின் முன் தேங்கும் நீரின் சேற்றைக் குறைக்கவும் தமிழன் கையாண்ட உத்தி குமிழித் தூம்பு. தண்ணீர்க்குள் ஒருவர் சென்று சுழிமுகத்தை அடைந்து, குமிழித் தூம்பை மேலே தூக்குவார். அடியில் இருக்கும் இரு துளைகளின் வழியே, மேலே இருக்கும் நீர் சேறு வெளியேறும்.

33) ஆளறிசோதனைக் கருவி மனிதனின் கைரேகை, முகம், விழித்திரை ஆகியவற்றில் ஒன்றையோ அனைத்தையுமோ அடையாளமாகப் பதிவு செய்யவும் பதிவு செய்த அடையாளம் மூலம் மறுபடி ஆளை அறியவும் பயன்படுகிறது.

34) வனப்பு → அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

35) உயிர் வாழ்க்கைக்கு உணவும், உணவிற்கு நிலமும், நிலத்திற்கு நீரும் அவசியம். ஆதலால் நீர்நிலைக்கு ஆதாரமாகிய ஏரி, குளம், குட்டைகளைக் கட்டிக் காப்பவர், குறையாத இன்பத்தோடு நிலைத்த புகழைப் பெறுவர்.

36) எங்கள் ஊர் காளியம்மன் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும். விழா நடைபெறும் நாள் குறிப்பதற்காக ஊர்ச்சபையின் கூட்டம் கூட்டப் பெறும். பறையறைந்து தெருக்கள் தோறும் சென்று செய்தியைக் கூறுவர்.

37) முன்னோர் சொன்ன முதுமொழிகளை வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும் - அன்பு, அடக்கம், பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும் - அறிவியல் எனும் புதுமையால் இனம், மொழி கடந்து அனைவரும் தமிழை நிலைநிறுத்த வேண்டும் - ஏவுகணையின் வேகம் போல் எல்லாக் கோணங்களிலும் தமிழை ஏற்றுங்கள்.

Scanned by CamScanner

38) புறம் + நான்கு + நூறு = புறப்பொருள் தொடர்பான நானூறு பாடல்களைக் கொண்ட நூல். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறம் எனவும் புறப்பாட்டு எனவும் வழங்கப் பெறும் நூல்.

39) அ) 3. திருவள்ளுவர்
ஆ) 4. சீத்தலைச் சாத்தனார்
இ) 1. எட்டுத்தொகை
ஈ) 5. தொல்காப்பியர்
உ) 2. தமிழ் ஒளி.

40) 1. சர் ஆர்தர் காட்டன்
2. சர் ஆர்தர் காட்டன்
3. கல்லணையைச் சிறு சிறு பகுதிகளாய்ப் பிரித்து மணல் போக்கினை அமைத்தார்.
4. கிராண்ட் அணைக்கட்.
5. கல்லணை.

41) குத்து விளக்கின் தெய்வீகம்
குடும்பப் பெண்ணின் நற்கோலம்
எங்கும் கேட்கும் நாதசுரம்
எழிலாய் ஆடும் நாட்டியம்
உயிரில் கலந்திடும் இசையை
உணர்வு எழுப்பிடும் பறை.

42) நின்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
~~நீ~~நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே.

Scanned by CamScanner

43)

அ. தமிழ் பழமையும் தொன்மையும் பெற்றது - புதிய படைப்புகளுக்கு ஈடு கொடுத்து வளர்ந்து வருகின்றது - வாய்மொழி கூறும் சிறப்புகள் - உயிர் எழுத்துகளில் உள்ள குறில் நெடில் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன. - திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்று போலவே உள்ளன - திணை, பால் பாகுபாடுகள் இயற்கையானது - போன்ற பல சான்றுகள்.

ஆ) தமிழகத்தில் நடைபெறும் ஏறுதழுவுதலில் காளையை அடக்குவோர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது - கோவிலின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர் - எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு - அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

தயாரிப்பு: எஸ். ஜெயசெல்வன், ப.ஆ,
தி.ஆ. மேல்நிலைப் பள்ளி,
திருவிடைமருதூர்.
9443740120.

→

Scanned by CamScanner